செய்தி வெளியீடு எண் : 2014 நாள் : 05.10.2023

## <u>செய்தி வெளியீடு</u>

**"வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில் வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வழங்கி, சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு சிறப்பு செய்து, புகைப்பட கண்காட்சி மற்றும் அன்னதானத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.10.2023) இந்து சமய அறநிலையத் துறை சார்பில் சென்னை, கலைவாணர் அரங்கில் நடைபெற்ற "வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவில், கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்களிடம் வழங்கினார். மேலும், "வள்ளலாரின் இறை அனுபவங்கள்" என்ற நூலினை வெளியிட்டு. 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக சிறப்புக் குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி சிறப்பித்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை திறந்து வைத்து, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தார்.

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார் பிறந்த அக்டோபர் 5 ஆம் நாள் இனி ஆண்டுதோறும் "தனிப்பெருங்கருணை நாள்" என கடைபிடிக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து 2021 ஆம் ஆண்டு முதல் அக்டோபர் 5 ஆம் நாள் "தனிப்பெருங்கருணை நாளாக" கொண்டாடப்பட்டு வருகிறது.

2022–2023 ஆம் ஆண்டிற்கான இந்து சமய அறநிலையத் துறை மானியக் கோரிக்கையில், "உயிர்த்திரள் ஒன்றெனக்கூறி தனிப்பெரும் கருணை ஆட்சி நடத்திய வள்ளல் பெருமானார் தருமசாலை துவக்கிய 156–வது ஆண்டு தொடக்கமும் (25.05.2022) வள்ளல் பெருமான் இவ்வுலகிற்கு வருவிக்க உற்ற 200–வது ஆண்டு தொடக்கமும் (5.10.2022) ஜோதி தரிசனம் காட்டுவித்த 152–வது ஆண்டும் (5.02.2023) வரவிருப்பதால் இம்மூன்று நிகழ்வுகளையும் இணைத்து அவரது 200–வது அவதார ஆண்டான அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை 52 வாரங்களுக்கு முக்கிய நகரங்களில் முப்பெரும் விழா எடுக்கப்படும் இதற்கென ஒரு சிறப்புக்குழு அமைக்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழாவினை சிறப்புற நடத்திடும் வகையில் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர் அவர்கள் தலைமையில் 14 உறுப்பினர்களைக் கொண்ட சிறப்புக்குழு அமைக்கப்பட்டு வள்ளலாரின் முப்பெரும் விழாவினை அக்டோபர் 2022 முதல் அக்டோபர் 2023 வரை, 52 வாரங்களுக்கு தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களில் சிறப்பாக நடத்திட செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

முதல் நிகழ்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையேற்று 5.10.2022 அன்று சென்னை, இராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், வள்ளலார் முப்பெரும் விழாவினை தொடங்கி வைக்கும் வகையில், "வள்ளலார் – 200" இலச்சினை, தபால் உறை மற்றும் சிறப்பு மலர் ஆகியவற்றை வெளியிட்டு, 52 வாரங்களுக்கான விழாக்களில் முதல் வார நிகழ்ச்சிகளையும், ஆண்டு முழுவதும் அன்னதானம் வழங்கும் நிகழ்வையும் தொடங்கி வைத்தார்.

மேலும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 25.04.2023 அன்று திருவருட்பிரகாச வள்ளலாரின் முப்பெரும் விழா மற்றும் தொடர் அன்னதானத்தினை செயல்படுத்திடும் வகையில், தமிழ்நாடு அரசின் மானியமாக ரூ.3.25 கோடி காசோலையை சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார்.

தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் வள்ளலாரின் பெருமையை பறைசாற்றுகின்ற வகையில் 52 வாரங்கள் நடத்தப்பட்ட பல்வேறு நிகழ்ச்சிகளில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்ததுடன், போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கி, அன்னதானத்தையும் தொடங்கி வைத்தனர்.

"வள்ளலார் – 200" ஓராண்டு தொடர் அறநிகழ்வின் நிறைவு விழாவான இன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டம், வடலூரில் 99 கோடியே 90 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள வள்ளலார் சர்வதேச மையத்திற்கான ஆணையினை வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் அவர்களிடம் வழங்கினார். மேலும், "வள்ளலாரின் இறை அனுபவங்கள்" என்ற நூலினை வெளியிட்டு, 52 வாரங்கள் முப்பெரும் விழாவினை சிறப்பாக ஏற்பாடு செய்து நடத்தியமைக்காக வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுவின் தலைவர் முனைவர் பி.கே.கிருட்டிணராஜ் வானவராயர், உறுப்பினர்கள் முதுமுனைவர் சத்தியவேல் முருகனார், திரு.கே.என். உமாபதி, திரு. சிவ மெய்யப்பன், முனைவர் உலகநாயகி, திரு.மெய். அருள்நந்தி சிவம், திரு.கே.உமாபதி, திரு.என்.இளங்கோ, திரு.எம்.கலைச்செல்வன்,

திரு.ஜி.சந்திரகாசு ஆகியோருக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசுகளை வழங்கி, சிறப்பித்தார்.

அதனைத் தொடர்ந்து, வள்ளலாரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்நாடு முழுவதும் 52 வாரங்கள் நடத்தப்பட்ட வள்ளலார் முப்பெரும் விழா நிகழ்ச்சிகளை தொகுத்து அமைக்கப்பட்ட சிறப்பு புகைப்பட கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, அன்னதானத்தை தொடங்கி வைத்தார்.

இவ்விழாவில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் திரு. தயாநிதி மாறன், திருவாவடுதுறை ஆதீனம் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் பரமாச்சாரிய சுவாமிகள், குன்றக்குடி ஆதீனம் சீர்வளர்சீர் பொன்னம்பல அடிகளார், பேரூர் ஆதீனம் சீர்வளர்சீர் மருதாச்சல அடிகளார், சிரவை ஆதினம் சீர்வளர்சீர் குமரகுருபர சுவாமிகள், மயிலம் பொம்மபுர ஆதீனம் சீர்வளர்சீர் சிவஞானபாலய தேசிகர், வேளாக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்திய ஞான மகாதேவ தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், சூரியனார் கோயில் ஆதீனம் சீர்வளர்சீர் மகாலிங்க தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், வள்ளலார் முப்பெரும் விழா சிறப்புக் குழுத் தலைவர் முனைவர் பி.கே. கிருட்டிணராஜ் வானவராயர் மற்றும் உறுப்பினர்கள், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை சிறப்புப் பணி அலுவலர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., ஆணையர் திரு.க.வீ.முரளீதரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையர்கள் திரு.அ.சங்கர், இ.ஆ.ப., திருமதி ந.திருமகள், திருமதி மா.கவிதா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in